Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 20 சனிக்கிழமை (03 05 1997) UTHAYAN - A Lively National Tamil Daily தழ்: 156

# திருமலை-காங்கேசன் கப்பற்சேவை அடுத்த மாதத்துடன் நிறுத்தப்படும்?

## அகதிகளை மன்னாரூடாக யாழ். அழைத்து வருவது குறித்து ஆராய்வு

— உதயன் திருமலைச் செய்தியாளர் —

திருகோணமலை, மே 3

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் நடைபெறும் கப்பற் சேவை அடுத்த மாதத்துடன் நிறுத்தப்படக் கூடும் என அறிய வருகிறது.

திருமலை-காங்கேசன் கப்பற் சேவையை நிறுத்திவிட்டு, வவுனியாவில் உள்ள குடாநாட்டு அகதிகளை மன்னாரூடாக அழைத்து வருவது குறித்து மிகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக திருமலைச் செயலக வட்டாரங்களில் இருந்து நம்பிக்கையாகத் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம் செல்வதற்காக வவுனியாவில் இருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதாலும் -

காங்கேசன்துறையில் இருந்து திருமலை வரும் பயணிகள் எண்ணிக்கையும் வீழ்ச்சி கண்டு வருவதாலுமே - இப்போது நடைபெறும் கப்பற் சேவையை நிறுத்துவது குறித்து ஆராயப்படுவதாகச் சொல்லப்பட்டது.

வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர கடந்த வாரம் திருகோணமலை வந்திருந்தார்.

அவர் பயணிகளின் நிலையையும், அவர்களின் வசதிக் குறைவுகளையும் நேரில் கண்டும், கேட்டும் அறிந்தார்.

அதனைத் தொடர்ந்து திருமலை - காங்கேசன் கப்பற்சேவையை நடத்துவதில் உள்ள சாதக, பாதகங்கள் ஆராயப்பட்டன என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில்

## வீதியில் நடமாடும் பொதுமக்கள் தாக்கப்படுவதாக முறைப்பாடு

கொழும்பு, மே 3

மட்டக்களப்பு மாவட்டம் துறைநீலாவணையில் இரவு நேரங்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடும் விசேட அதிரடிப் படையினர் வீதிகளில் நடமாடும் பொதுமக்களைத் தாக்குகின்றனராம்.

இது தொடர்பாக செஞ்சிலுவைசர்வதேசக் குழு அதிகாரிகாரிகளிடம் பொதுமக்கள் முறையிட்டுள்ளனர்.

துறைநீலாவணை, கண்ணகை அம்மன் ஆலயப்பகுதியிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் கடமையில் ஈடுபடும் இப்படையினர் மாலை 6.00 மணிக்குப் பின் வீதிகளில் நடமாடுவோரை வயது வேறுபாடின்றி தாக்கி வருவதாக முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிறிசேன கூரே கைதாக மாட்டார்!

### அவர் மீதான பிடியாணை செல்லாது

கொழும்பு, மே 3

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரேயை கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவு இனிச் செல்லாது என்று லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக விசாரணை நடத்திய ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக விசாரணை செய்து வந்த ஆணைக்குழு முன் தோன்றி சாட்சியம் அளிக்கும்படி சிறிசேன கூரே கோரப்பட்டதும் —

ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்காமல் அவர் வெளிநாடு சென்றதும் —

அவரைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததும் — தெரிந்தவையே.

இந்நிலையில் சிறிசேன கூரே கடந்த புதன்கிழமை நாடு திரும்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் 4 ஆவது சிரார்த்ததின வைபவங்களில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை காட்டுப் பிரதேசங்களில் புதிய ராணுவ நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, மே 3

பாதுகாப்புப் படையினர் திருகோணமலை மாவட்ட காட்டுப் பிரதேசங்களில் மறைந்திருக்கும் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு வடக்கே உள்ள கும்புறுப்பிட்டி, திரியாய், யான்ஓயா பிரதேசங்களில் இந்த 'றன்கெல்ல'' இராணுவ நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

இந்த நடவடிக்கையின் போது படையினர் புலிகளின் ஐந்து முகாம்களை நாசம் செய்துள்ளனர் என்றும் —

இவற்றில் ஒன்று 100 பேருக்கு மேல் தங்கியிருக்கக் கூடிய வசதியுடன் காணப்பட்டது என்றும் — படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றில் இருந்த உலர் உணவுப் பொருள்களைப் படையினர் கைப்பற்றியுள்ளனர் என்றும் —

பிளாஸ்டிக் நீர்த்தாங்கிகள், பி.வி.ஸி. பைப்புகள், தகடுகள் போன்றவற்றையும் அவர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் நடவடிக்கைகளுக்கு விமானப் படையினர் தொடர்ந்து உதவி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-3-150)

## விமான பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், மே 3

விமானம் மூலம் செல்ல பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 345 முதல் 360 வரை அனுமதி கிடைத்துள்ளதாகவும்—

இப்பட்டியலில் உள்ளவர்கள் யாழ். சிவில் அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யலாம் என்றும்—யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

(இ-3)

# தொழிற்கட்சி உறுப்பினர் அறுவர் ஈழத்தமிழருக்கு ஆதரவானவர்கள்

லண்டன், மே 3

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற தொழிற்கட்சி உறுப்பினர்களில் அறுவர் ஈழத் தமிழர்களுக்காக கடந்த காலங்களில் குரல் கொடுத்து வந்தவர்கள் என்று வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

கொன்சர்வேட்டிவ் கட்யுடன் ஒப்பிடுகையில் தொழிற்கட்சியே ஈழத்தமிழர் விடயத்தில் கூடிய அனுதாபப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாகவும் —

பிரிட்டனில் உள்ள ஈழத் தமிழர்களின் வாக்குகள் இம்முறை தொழிற்கட்சிக்கே கிடைத்தன என்றும் மேலும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசை அமைக்க பிளயருக்கு அழைப்பு

லண்டன் மே 3

பிரிட்டனில் புதிய அரசு ஒன்றை அமைக்குமாறு பிரிட்டிஷ் மகாராணியார் நேற்று தொழிற்கட்சித் தலைவர் ரொனி பிளயருக்கு அழைப்பு விடுத்தார்.

659 ஆசனங்களைக் கொண்ட பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைத்த முடிவுகளின்படி தொழிற்கட்சி 421 இடங்களைக் கைப்பற்றி இருந்தது.

மற்றும் கொன்சர்வேட்டிவ் கட்சி 163 இடங்களையும் லிபரல் ஜனநாயகக் கட்சி 46 இடங்களையும் கைப்பற்றி இருந்தன.

தொழிற்கட்சியின் வெற்றியை அடுத்து ஆதரவாளர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப பயணிகளுக்கு புதிய அனுபவம் ஒன்று ஏற்படப் போகுது எண்டு சொல்லுங்கோ...!

## கோண்டாவிலில் துப்பாக்கிச் சமர்

யாழ்ப்பாணம், மே 3

கோண்டாவில் வடக்கு பகுதியில் நேற்று மாலை 4.45 மணி அளவில் கடும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது.

சுமார் 15 நிமிட நேரம் இடம்பெற்ற இச்சமரின்சேத விவரங்கள் தெரியவரவில்லை. (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புடன் வரவேற்கின்றோம்

இன்று (3 — 5 — 1997) பிற்பகல் கொய்யாத்தோட்டத்தில் நடைபெறவுள்ள பாராட்டு விழாவில், கலந்து கொள்ள, வருகை தரவிருக்கும்,

**கலாநிதி க. குணராசா**
(பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)

**திருவாளர் து. வைத்திலிங்கம்**
(யாழ். பிரதேச செயலர்)

**திருவாளர் வே. பொ. பாலசிங்கம்**
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)

ஆகியோரை வருக, வருக வென இருகரம் நீட்டி, இனிதே வரவேற்கின்றோம்.

கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்.
கொழும்புத்துறை வர்த்தக சங்கம்.

(46650)

## புலமைப் பரிசில் '97

27 — 4 — 97 எம்மால் எமது நிறுவனத்தில் நடத்தப்பட்ட 21 ஆவது பரீட்சையில்

**செல்வன் மகேந்திரராஜா டினேஷ்**
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

முதன்மைப் புள்ளி - 196 புள்ளிகள் பெற்றமைக்காகப் பாராட்டுகின்றோம்.

4 — 5 — 97 ஞாயிறு வழமைபோல் 22 ஆவது பரீட்சை நடைபெறும்.

- பரீட்சைக்குப் பின் வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(46657)

## புலமைப் பரிசில் '97

**விசேட பயிற்சி வகுப்பு**
**ஆரம்பம்: 10-05-97**

- அனுமதிப் பரீட்சை மூலம் மட்டுமே 35 மாணவர்கள் இவ்வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர்,
- வாராவாரம் ஊக்குவிப்பு பயிற்சி. பரீட்சைகள் மூலம் சிறந்த பெறுபேற்றை இலக்காகக் கொண்டு வகுப்புகள் நடத்தப்படும்.

அனுமதிப் பரீட்சை: 04 - 05 - 97 ஞாயிறு பி. ப. 3. 00 மணி

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(46656)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சபாரத்தினம் கனகசபாபதி**
(ஊழியர், தபாலகம் கொக்குவில்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடனும் சுற்றத்தாருடனும் எமது சோகத்தைப் பகிர்ந்து கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தபாலதிபர், ஊழியர்கள்,
கொக்குவில் தபாலகம்.

(47208)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**ஆண்டு - 05 புலமைப்பரிசில்**
**பயிற்சிப் பரீட்சை இல. 01 - 1997**

காலம்: 03-05-1997 சனிக்கிழமை
காலை 11-00 மணி

இடம்: யாழ். மத்திய கல்லூரி - ஆரம்ப பிரிவு

குறிப்பு:
கல்லூரி மாணவர்களுடன் ஏனைய மாணவர்களும் பரீட்சைக்கட்டணமாக ரூபா 15.00 செலுத்தி பரீட்சையில் பங்கு பற்றலாம்.

(சி/660) - அதிபர்

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சபாரத்தினம் கனகசபாபதி**
(ஊழியர், தபாலகம் கொக்குவில்)

அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும், சுற்றத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குளப்பிட்டிச் சந்தி வர்த்தகர்கள்,
கொக்குவில்.

(47212)

வெளிவந்துவிட்டது!

**க.பொ.த. (உயர்தர) வர்த்தகப்பிரிவு**
மாணவர்களுக்கான
வணிகப்புள்ளிவிபரவியல் - II

ஆக்கியோர்:-
சு. பத்மராஜ் B Sc.
த. வசந்தராஜா B.Sc.

கிடைக்கும் இடங்கள்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் & புத்தகசாலை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(46652)

## A/L '97

**Physics**
**Botany**
**Geography**
**Agriculture**
**Pol. Science**

அரசாங்க Model Paper பெற்றுக்கொள்ளலாம்.

**BOND**
யாழ்ப்பாணம்.

(46655)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சைகள் கல்வியாண்டு 1994/ 95**

தற்போதைய பல்கலைக்கழக சூழ்நிலைகளினால், கீழே தரப்பட்டுள்ள பரீட்சைகள் பிற்போடப்பட்டிருக்கின்றன.

முதற் கலைத்தேர்வு-1995
முதல் வர்த்தகத் தேர்வு 1995

புதிய திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/659)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.**
**கலைப்பீடம்**
**1994 - 95, 1995 - 96**
**முதலாண்டு கலைத் தேர்வு**

05-05-97 திங்கட்கிழமை தொடங்கவிருந்த மேற்படி தேர்வு மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

பதிவாளர்
02-05-1997

(சி/658)


# ரூ. 41 லட்சம் செலவில் பால் பதனிடும் திட்டம்

பருத்தித்துறை, மே 3

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இம்மாத முடிவுக்குள் சுமார் 41 இலட்சம் ரூபா முதலீட்டுடன் யாழ்.குடாநாட்டில்உற்பத்தியாகும் பாலைப் பதனிட்டு பாலின் உப உற்பத்திகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் இத்திட்டத்தை அமுல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் ஆயிரத்து 500 கறவைப் பசு வளர்க்கும் ஆயிரத்து 500பயனாளிகளிடமிருந்து சுமார் மூன்று இலட்சம் லீற்றர் பாலைக் கொள்வனவு செய்ய முடியும். அதனைப் பதனிட்டு அதிலிருந்து சுத்தமான பசு நெய், ஆடை நீக்கிய பால், தயிர், யோகட் பசுப்பால் ரொபி என்பன உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்படும். இதன் மூலம் நுகர்வோர் பெரும் பயனடைவதுடன் பலர் வேலை வாய்ப்பும் பெற முடியும்.

இதற்கான திட்டஅறிக்கை யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதனால் அங்கீகரிக்கப்பட்டு ஐ. நா. அ. திட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-118)

## நினைவுப் பரிசு வழங்கல்

வலிகாமம் தெற்கு, மே 3

குரும்பசிட்டி சன்மார்க்க சபை கல்வி மேம்பாட்டு நிதியத்தினால் அமரர் த. இராசரத்தினம் அமரர் மு. சபாரத்தினம் ஆகியோரது நினைவுப் பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இணுவில் கிழக்கு 'முதாகர பவன' இல்லத்தில் காலை 10.00 மணியளவில் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில், சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் சி. விக்கினராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், சைவப்புலவர் சு. செல்லத்துரை, எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஐ-152)

## நினைவு நாள் நிகழ்வு

அண்மையில் காலமான அருட்திரு ஹில்லறி ஜெபநேசனின் நினைவு நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் துரை ஆரோக்கிய தாஸன் தலைமையில் நடைபெறவுள்ளது.

10 பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

(ஐ)

## பாராட்டுவிழா

யாழ். பல்கலைக்கழக பதிவாளராக பதவியேற்றுள்ள கலாநிதி க. குணராசாவுக்கானபாராட்டுவிழாவும் யாழ் பிரதேச செயலராகப் பதவியேற்றுள்ள து. வைத்திலிங்கத்துக்கான வரவேற்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொய்யாத்தோட்டம் சனசமூகநிலைய முன்றலில் நடைபெறும்.

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா விஜயரட்ணம் (சமுத்திரா)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவிலில் வசித்தவருமாகிய கந்தையா விஜயரட்ணம் 29 - 04 - 97 அன்று ஸ்கந்தபுரத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகம்மா தம்பதிகளின் மகனும் மற்றும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சின்னத்தம்பி, தில்லைவனம் ஆகியோரின் அன்பு மருமகனும், சுதமதி, சுகந்தினி, ஜனா (பிரான்ஸ்), அன்பு, லக்ஷி ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மபாலன், ரமேஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30 - 04 - 97 அன்று ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தியாகராசா ஜெகன்
(மருமகன்)

அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

(47206)

## கதிரவேலு முத்துத்தம்பி (குட்டித்தம்பி)

சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிரவேலு முத்துத்தம்பி 25-4-97 இல் ஆஸ்திரேலியாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர், ஆஸ்திரேலியா), Dr. பரமேஸ்வரி (வவுனியா), Dr. செல்வராஜா (ஆஸ்திரேலியா), செல்வநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியை – ஆஸ்திரேலியா), கைலாயநாதன் (கணக்காளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், குமாரசாமி (ஓய்வு பெற்ற படவரைஞர்), கனகசுந்தரம் (உதவிக்கல்விப் பணிப்பாளர் - வவுனியா), முத்துலிங்கம் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), லங்கா (ஆஸ்திரேலியா), இந்துமதி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-4-97 அன்று ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

தகவல்:
க. குமாரசாமி
(மருமகன்)

35/10 செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(46647)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பிரிட்டிஷ் தேர்தலில்

# தொழிற் கட்சி பெரு வெற்றி!



ரொனி பிளயர்

# இளம் தலைமுறையின் ரொனி பிளயர் புதிய பிரதமர்!

லண்டன், மே 3

**பிரிட்டனில் நடந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிற் கட்சி அமோக வெற்றியீட்டியிருக்கிறது.**

**கடந்த 50 ஆண்டுகால தேர்தல் வரலாற்றில் ஆகக் கூடிய பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தொழிற் கட்சி சாதனை படைத்துள்ளது.**

தேர்தல் முடிவுகள் நேற்று அதிகாலை வெளிவரத் தொடங்கியதுமுதல் தொழில் கட்சி வெற்றியை நோக்கி நடைபோட்டது.

நேற்றுப் பிற்பகல் வரை வெளியான முடிவுகளின் படி 659 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் தொழிற்கட்சி 417 இடங்களைக் கைப்பற்றியிருந்தது.

165 ஆண்டுகால அரசியல் பின்னணியைக் கொண்ட தொழிற் கட்சியின் வரலாற்றில் முன்னர் ஒருபோதும் கிடைத்திராத பெரு வெற்றியை அது ஈட்டியிருப்பது பிரிட்டிஷ் அரசியலில் பெரும் திருப்பு முனையாக அமைகிறது. (ஐ-10)

## ஜோன் மேஜர் ராஜினாமா

லண்டன், மே 3

தேர்தலில் தோல்வி அடைந்த பிரதமர் ஜோன் மேஜர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் தனது ராஜினாமா கடிதத்தை சம்பிரதாய முறைப்படி 'பக்கிங்ஹாம்' அரண்மனைக்குச் சென்று பிரிட்டிஷ் மகாராணியிடம் கையளிக்க ஏற்பாடாகி இருந்தது.

தேர்தலில் பெரு வெற்றியீட்டிய ரொனி பிளயருக்கு மேஜர் தனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மக்களின் தீர்ப்பை ஏற்பதாக அவர் பத்திரிகையாளர்களிடம் கூறினார். (ஐ)

உலக அரங்கில்

லண்டன், மே 3

**பிரிட்டனின் புதிய பிரதமராக தொழிற் கட்சியின் தலைவர் ரொனி பிளயர் (வயது43) பதவியேற்கவுள்ளார்.**

**தேர்தலில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் அமோக வெற்றியீட்டிய பிளயர் இந்த நூற்றாண்டின் இளம் வயது பிரதமர் என்ற பெருமையைப் பெறுகிறார்.**

1994 ஆம் ஆண்டு தொழிற் கட்சித் தலைவர் ஜோன் ஸிமித்தின் திடீர் மரணத்தை அடுத்து கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்ற ரொனி பிளயர் பிரிட்டனில் இளைய தலை முறையினரிடையே பெரும் செல்வாக்குப் பெற்றவராகத் திகழ்ந்தார்.

தலைமைப் பொறுப்பை ஏற்றது முதல் தொழிற் கட்சிக்குள் அவர் தீவிர சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

கடந்த 18 வருடகாலத்தின் பின் தொழிற் கட்சி ஆட்சி பீடத்தில் அமர அவரது தலைமைத்துவமே காரணமாக அமைந்துள்ளது எனக் கருதப்படுகிறது.

ரொனி பிளயரின் தேர்தல் வெற்றியை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

தங்களின் புதிய பிரதமரை வரவேற்பதற்காக மக்களும் ஆதரவாளர்களும் லண்டன் மாநகரில் திரண்டவண்ணம் உள்ளனர். (ஐ-10)

# கொன்ஸர்வேட்டிவ் கட்சியின் 18 வருட ஆட்சி அஸ்தமனம்

லண்டன், மே 3

கடந்த 18 வருடகால கொன்ஸர்வேட்டிவ் கட்சியின் ஆட்சி பிரிட்டனில் அஸ்தமித்துள்ளது.

நேற்று முன்தினம் நடந்த பொதுத் தேர்தலில் பிரதமர் ஜோன் மேஜர் தலைமையிலான ஆளும் கொன்ஸர்வேட்டிவ் கட்சி, ரொனி பிளயர் தலைமையிலான தொழில் கட்சியிடம் ஆட்சியைப் பறிகொடுத்தது.

'கொன்ஸர்வேட்டிவ் கட்சியின் தோல்வி எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் அது இந்தளவு பின்னடைவைச் சந்திக்கும் என்று யாருமே கருதவில்லை'' என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்று பிற்பகல் வரை வெளியான முடிவுகளின் படி 659 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் கொன்ஸர்வேட்டிவ் கட்சிக்கு 160 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

மூன்றாவது பெரிய கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சி 40 இடங்களைப் பெற்றிருந்தது. (ஐ-10)

## சீன ரயில் விபத்தில் 67 பேர் மரணம்

பீஜிங், மே 2

சீனாவில் பெரும் எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த ரயில் ஒன்றுடன் பின்னால் வந்த மற்றொரு ரயில் மோதியதனால் ஏற்பட்ட கோர விபத்தில் 67 பேர் பலியாகினர். 260 க்கு மேற்பட்டோர் படுகாமயடைந்தனர்.

ரொங்ஜியாவான் ரயில் நிலையத்தில் செவ்வாயன்று காலை இந்த ரயில் விபத்து இடம்பெற்றது.

காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் பலரது நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (ஐ)

ஸயர் அதிபரின் சகாவை

## புதிய சபாநாயகராக்கும் முயற்சி முறியடிப்பு

கின்ஸாசா, மே 3

ஜனாதிபதி முபுட்டுவின் நெருங்கிய சகா ஒருவரை நாடாளுமன்ற சபாநாயகராக நியமிக்க எடுக்கப்பட்ட முயற்சியை ஸயர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்துவிட்டனர்.

ஜனாதிபதி தனது கடமையை நிறைவேற்ற முடியாது போனால் சபாநாயகரே அவருக்குப் பின்னர் ஆட்சியைப் பொறுப்பேற்பார் என்பது அரசமைப்பு விதியாகும்.

இதேவேளை—


ஸயர் அதிபர் முபுட்டுவுக்கும் கிளர்ச்சியாளர்களின் தலைவர் லோறன் கபீலாவுக்கும் இடையிலான சந்திப்பு திட்டமிட்டபடி நேற்று இடம்பெறவில்லை.

பேச்சுவார்த்தையில் தென்னாபிரிக்க அதிபர் மண்டேலா கலந்து கொள்ளச் செல்ல முடியாமற் போனதாலேயே சந்திப்பு நடைபெறவில்லை.

அந்த சந்திப்பு இன்று சனிக்கிழமை நடைபெறும். (ஐ)

# முதல்வர் யாதவ் மீதான நிதி ஊழல் குற்றச்சாட்டு; விசாரணை நடத்தப்படும் என்கிறார் குஜ்ரால்

## ஐக்கிய முன்னணிக்குள் நெருக்கடி வரலாம்



ஆளும் ஐக்கிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான பீஹார் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் பாரிய நிதி ஊழல் விவகாரம் குறித்து பாரபட்சமற்ற நடவடிக்கை ஒளிவு மறைவு இன்றி எடுக்கப்படும். என்று ஐ.கே. குஜ்ரால் தெரிவித்தார்.

குற்றம் இழைத்தவர்கள் மீது ஒளிவு மறைவு இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தாம் பதவி ஏற்ற நாள் அன்று தெரிவித்ததை பிரதமர் குஜ்ரால் ஞாபகப் படுத்தியுள்ளார்.

பிரதமர் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்ற பின்னர் எதிர்நோக்கும் சவாலாக இந்த ஊழல் விவகாரம் உருவெடுத்திருக்கிறது.

ஜனதா தள் கட்சியின் தலைவரான லாலு பிரசாத் யாதவ் மீதும் மற்றும் 55 அரசியல் வாதிகள் மீதும் 27 கோடி 10இலட்சம் டொலர் நிதி ஊழல் தொடர்பாக மத்திய புலனாய்வுப் பணியகம் குற்றஞ் சாட்டி உள்ளது.

கால்நடை உணவுக் கொள்வனவுக்கென பீகார் மாநில அரசு அமைத்த நிதியத்தில் இருந்து இந்த நிதி கையாடப் பட்டுள்ளது.

முதலமைச்சர் யதாவ் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று நெருக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

மத்திய புலனாய்வுப் பணியகத்தின் குற்றச்சாட்டை முதலமைச்சர் யாதவ் மறுத்துள்ளார்.

ஆனால் யதாவ் உடன் பதவி விலக வேண்டும் என்று எதிர்க் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியும் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

யாதவ் மீதான குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டால் அவர் பதவியில் இருந்து விலக நேரிடும். அவ்வாறு அவர் பதவி விலக மறுத்தால் அவரைப் பதவி விலகுமாறு கோர ஜனாதிபதிக்கு பிரதமர் சிபார்சு செய்ய வேண்டும். அவ்வாறான நிலைமை யாதவ்வின் கட்சியைச் சேர்ந்தவரான பிரதமர் குஜ்ராலுக்கு இக்கட்டான நிலைமையை உருவாக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லாலு பிரசாத் யாதவ் பதவியில் இருந்து நீக்கப்படுவாரானால் ஆளும் ஐக்கிய முன்னணி அரசு புதிய நெருக்கடியைச் சந்திக்கும் ஆபத்து உள்ளது. (ஐ)

## ஏழைகளின் அவல நிலையை அனுபவ ரீதியாகப் பெறும் பயிற்சி

### எம். பிக்களுக்கு வழங்கும் திட்டம்

பேர்ன்; மே 3

குடியிருக்க வீடின்றி, உண்ண உணவின்றி வாழ்க்கை நடத்தும் மக்களின் அவலத்தினை நேரடியாக வாழ்ந்து காட்டும் பயிற்சி ஒன்றினை ஜேர்மனிய அரசியல் வாதிகளுக்கு அளிக்க முன்வந்துள்ளது. [illegible] என்று தெரிவித்தனர்.

ஆனால் மே மாதம் 6 ஆம் திகதி தொடங்கும் இம் பயிற்சியில் கலந்து கொள்ள இதுவரை ஒரேயொரு அரசியல் வாதி மட்டுமே முன்வந்துள்ளார் என்று தெரிவிக்கப் படுகிறது.

மற்றவர்கள் இதற்கெல்லாம் எங்களுக்கு நேரமில்லை எனக் கூறி ஒதுங்கிக் கொண்டார்கள். (இ-10)

## முக்கிய அமைச்சர்களும் படுதோல்வி

லண்டன், மே 3

பிரிட்டிஷ் தேர்தலில் ஆளும் கொன்ஸர் வேட்டிவ் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் பலரும் படுதோல்வி அடைந்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் மல்கம் ரிப்கின்ட், வர்த்தக அமைச்சர் அயன்வாங் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் மைக்கேல் போர்ஸைத் ஆகியோர் உட்பட 6 அமைச்சர்கள் தோல்வியடைந்தனர் என்று முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன. (ஐ-10)

## அல்ஜீரிய கிராமவாசிகள் பதில் தாக்குதல்

இஸ்லாமிய தீவிரவாதிகளால் அடுத்தடுத்து படுகொலை செய்யப்பட்டு வரும் அல்ஜீரியா நாட்டுக் கிராமவாசிகள் நேற்று முன்தினம் பதில் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

மீதியா என்ற கிராமத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்த தீவிரவாதிகளை நோக்கி கிராமவாசிகள் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கிகளால் சரமாரியாகச் சுடவே தீவிரவாதிகள் பின்வாங்கி ஓடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி

### திரு. மு. பொன்னுத்துரை

(முன்னாள் அலுவலக உத்தியோகத்தர்,
ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம், தெல்லிப்பழை)

எமது ஆலயத்தில் பக்தியோடு நற்பணியாற்றிய அன்பர் 29 – 04 – 97 இல் கொழும்பில் காலமான செய்தியறிந்து மிகுந்த கவலையடைகிறோம். அமரரின் ஆத்மா சாந்தி பெற அம்பாளை வேண்டுகிறோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(சி/655)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 16 – 03 – 1938 | 03 – 04 – 1997 |

### திருமதி பராசக்தி திருஞானசெல்வம்

எமது தாயார் நோயுற்றிருந்த வேளை உதவி புரிந்தவர்களுக்கும், அன்னாரின் மறைவு கேட்டு துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 03 - 05 - 97 சனிக்கிழமை நடைபெறும். அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(46637)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் ஆனந்தம் சண்முகம்

(இளைப்பாறிய புகையிரத தொழிநுட்ப உத்தியோகத்தரும், பிரபல சோதிடரும்)

| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 1939 - 01 - 25 | 1997 - 04 - 03 |

ஊருக்கெல்லாம் உபதேசம் செய்தாய் – இன்று
ஊரையே கலங்கவைத்து விட்டுச் சென்றுவிட்டாய்
காலமெல்லாம் இரவு பகல் என்று பாராது -
உழைத்து பாசமுடன்

எமைவளர்த்த அன்புத் தெய்வமான அப்பாவே! தங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

வங்களா வீதி,
மீசாலை.

(466[illegible])

## சமய சந்நிதிகளில்

நாகர்கோயில் கண்ணகை அம்மன் கோயிலில் ''கோவலர் காதை'' படிப்பு இம்மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் பொங்கல் உற்சவத்துடன் கோவலர் காதை படிப்பு முடிவடையும். (-173)

★ ★ ★

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 09-05-1997 வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி (10 – 05 – 1997) மறு நாள் காலை வெளிமடை விசேட பூசையுடன் முடிவடையவுள்ளது. இவ் உற்சவம் தொடர்பாக ஆலய வளவினுள் 09-05-1997 அன்று நிற்கும் பக்தர்களுக்கு எவ்வித இராணுவ அச்சுறுத்தலும் ஏற்படமாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்கு இரவில் வருபவர்கள் விளக்குகளுடன் வரலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173-119)

★ ★ ★

உரும்பிராய் கிழக்கு திருக்கரந்தலூர் ஸ்ரீ சிவபூதநாதேஸ்வர சுவாமி கோயில் வருடாந்த உற்சவ வேட்டைத்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

வண்ணார் பண்ணை மேற்கு அரசடி ஸ்ரீ விநாயகர் கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 30ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகியது தொடர்ந்து 12 நாள்கள் உற்சவம்நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணவியம்பதி ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலயத்தின் கும்பாபிஷேகதின வருடாந்த மணவாளக் கோலத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10,30 மணிக்கு 108 கலச சங்காபிஷேகமும், விசேட அபிஷேகம், பூசை ஆராதனைகளுடன் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினெட்டு நாள்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதியும். மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (ஐ-30)

### சமயக்கருத்தரங்கு

'நியந்த்ரி' சமயக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில், இந்துகலாசார அமைச்சின் உதவிஆணையாளர் ஆ. மகாலிங்கம் கருத்துரை வழங்குவார் (ஐ-152)

### திறப்பு விழா

கொழும்புத்துறை, மே 3

ஊர்காவற்றுறைப் பகுதி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உப அஞ்சல் அலுவலகங்களைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கும் வைபவம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவதாசன் இவ் வைபவத்தில் பங்கு பற்றி உப அஞ்சல் அலுவலகங்களை மங்கல [illegible] திறந்து வைப்பார். (ஐ-[illegible])

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கடற்றொழில் திணைக்களத்தில் கடமையாற்றும்
திரு. சுப்பையா சுப்பிரமணியத்தின் தாயார்

### திருமதி சுப்பையா பொன்னம்மா

அவர்கள் சிவபதம் எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவுத்துக் கொள்கின்றோம்.

யாழ். கடற்றொழில் திணைக்கள
உத்தியோகத்தர்கள்.

(46649)

வடமராட்சி

## தெற்கு மேற்கு பிரதேச சபை கேள்வி அறிவித்தல் - 1997

இப்பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக் கடைக்கான குத்தகை **06—05—97** முற்பகல் 11.00 மணிக்கு இச்சபையின் தலைமை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் வழங்கப்படும். ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் **06—05—97** முற்பகல் 10.00 மணிவரை கட்டைவேலி உப அலுவலகத்தில், அட்டவணையில் காட்டப்பட்ட பிணைப்பணத்தைச் செலுத்திப் பெயரைப் பதிவு செய்துகொள்ளலாம். ஏற்றுக்கொள்ளப்படுபவர். குத்தகைத் தொகையின் 1/3 பங்கை பாதுகாப்பு வைப்புப் பணமாகச் செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

| இறைச்சிக்கடையின் பெயர் | பிணைப்பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|
| அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக் கடை | ரூ. 500/- | ரூ. 40,000/- |

செ. ஸ்ரீநிவாஸன்.
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

23 - 04 - 1997

(சி/656)

## கேள்வி அறிவித்தல்

### நிர்மாணத் திணைக்களம்

யாழ்ப்பாணம்

### சங்கானை வைத்தியசாலையில் 14 படுக்கைகள் கொண்ட மகப்பேற்றுமனை நிர்மாணித்தல் கட்டம் - I

மேற்படி வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, நிர்மாணத் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் 1997ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23ஆம் திகதி முற்பகல் 10-30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இக்கேள்விக்கான மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா **500/-** ஐயும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா **9100/-** ஐயும் யாழ்ப்பாணம், றக்கா வீதியிலமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

ரூபா பத்து இலட்சத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு M 9 தரத்தில் அல்லது மேற்பட்ட தரத்தில் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) நிர்மாண வேலைகளுக்கு பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன் யாழ். நிர்மாணத்திணைக்களப் பிரதம பொறியியலாளர் அலுவலகத்திலும் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

இவ்வாறான தகுதியுடைய ஒப்பந்தக்காரர்கள் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் தற்போதைய வேலை விவரங்களை தெரிவி தல் வேண்டும்.

தகுதியுடையோர் கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்தி கேள்விப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும்.

கேள்விப் பத்திரங்களை 1997 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 19ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி. ந. சுந்தரமூர்த்தி.
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
03-05-1997

[சி/657]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட

# கூ. சங்கங்களுக்கு

# பெரும் நிதி நெருக்கடி

யாழ்ப்பாணம், மே 3

**யாழ். மாவட்டத்தில் இயங்கும் ப.நோ.கூ. சங்கங்களுக்குப் பெரும் நிதி நெருக்கடி நிலை உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.**

**இதனால் கொழும்பில் இருந்து பொருள்களை இங்கு எடுத்து வந்து விற்பனை செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.**

கடந்தகால இடப்பெயர்வுகள், சீரான வர்த்தகம் தடைப்பட்டமை, அதிகரித்து வரும் தனியார் வியாபாரிகளின் போட்டி என்பன காரணமாகவே ப.நோ,கூ. சங்கங்களின் நிதி நிலையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

கொழும்பில் தற்சமயம் பொருள்களை ஏற்றிக் கொண்டிருக்கும் 'மாஹோ' கப்பலில் ஆயிரத்து 200 மெற்றிக்தொன் பொருள்களை ஏற்ற யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். அரச அதிபரால் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

கூட்டுறவுச் சங்கத்தினரிடம் பொருள் கொள்வனவு செய்யப் போதிய நிதி இல்லாததாலும் —

கொழும்பில் கடனடிப்படையில் பொருள்களை எடுத்து வந்து அவற்றை இங்கு தனியாருடன் போட்டி போட்டு விற்க முடியாத நிலை உள்ளதாலும் — அரச அதிபரால் ஒதுக்கப்பட்ட கப்பலில் கூட்டுறவுச் சங்கத்தினால் பொருள்களை ஏற்றமுடியாது போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் 300 மெற்றிக்தொன் பொருள்களை மட்டுமே எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-3)

# 75 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் சமாசத்தில் தேக்கம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். மாவட்ட கூட்டுறவுறச் சங்கங்களின் சமாசத்தால் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட பொருள்களில் சுமார் 75 இலட்சம் ரூபா பெறுமதியானவை இங்கு தேங்கிக் கிடப்பதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

பல லட்சம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகள், ரயர் வகைகள் உட்பட ஏராளமான பொருள்கள் தேங்கிக் கிடப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண விவசாயிகளால் கொள்வனவு செய்யக் கூடிய மதிப்பற்ற ரகத்தைச் சேர்ந்த உழவு இயந்திரம் ஒன்றும் கடந்த ஒருவருடத்துக்கு மேலாக களஞ்சியத்தில் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பொருள்கள் தேங்கிக்கிடப்பதால் ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடியை சமாளிக்க அவற்றை விசேட விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து சகாய விலையில் விற்பனை செய்ய ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இந்தப்பொருள்களில் பலவற்றை கொள்வனவு செய்த விலையிலும் குறைவாகவே விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# இணுவில் பகுதியில் மூலிகைத்தோட்டம்

பருத்தித்துறை, மே 3

சித்த வைத்திய கூட்டுறவுச்சங்கம் இணுவில் பகுதியில் ஒரு ஏக்கர் காணியில் மூலிகைத் தோட்டம் ஒன்றை அமைப்பதற்கான திட்ட அறிக்கையை யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கே. சண்முகநாதனிடம் கையளித்துள்ளது.

மூன்று வருட காலத்தில் ரூபா ஆறு இலட்சம் முதலீட்டில் அறுபதுக்கு மேற்பட்ட மூலிகைகளை அங்கு நாட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-118)

## வயாவிளான் ம. ம. வித்தியாலயம்

# பழைய இடத்தில் செயற்பட இப்போது அனுமதிக்க முடியாது

## அதிபருக்கு படைத் தளபதி கடிதம்

யாழ்ப்பாணம், மே 3

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் நிரந்தர அமைவிடம் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளது. எனவே அப்பகுதியில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படும் போதுதான் மகா வித்தியாலயமும் அங்கு இயங்க அனுமதிக்கப்படும்.

511 ஆவது படையணியின் தளபதி வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வயாவிளான் மகாவித்தியாலயம் தற்சமயம் உரும்பிராயில் தற்காலிக இடத்தில் வசதிகளற்ற நிலையில் இயங்குவதால், பழைய இடத்தில் இயங்க அனுமதி வழங்குமாறு வித்தியாலய அதிபர் எஸ். நடராசா 511 படையணியின் தளபதியைக் கேட்டிருந்தார்.

ஆரம்பகட்டமாக மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படும் பகுதிக்கு வெளியே வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அப்பாடசாலை அமைந்திருப்பதால் அதனை தற்போது மீளத் திறக்க அனுமதிக்க முடியாதுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் மக்கள் குடியேற அனுமதிக்கப்படும் போது இப்பாடசாலையும் அங்கு இயங்க ஏற்பாடு செய்யப்படும் — என்று தளபதி தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

# மற்றொரு அம்புலன்ஸ் யுனிசெவ் வழங்கும்

யாழ்ப்பாணம், மே 3

வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு 'யுனிசெவ்' அமைப்பு மற்றொரு அம்புலன்ஸ் வண்டியை வழங்க உள்ளது.

அண்மையில் அந்த அமைப்பால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பயன்படுத்தப் படுகிறது.

புதிதாக வழங்கப்படவுள்ள அம்புலன்ஸ் மற்றொரு ஆஸ்பத்திரிக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — குடா நாட்டில் உள்ள 6 வைத்திய சாலைகளில் அம்புலன்ஸ் வண்டிகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)


## விற்பனைக்கு

**கைத்தறி நெசவுக்குரிய நூல்கள் விற்பனைக்குண்டு**

| 1 KG | | 1 KG | |
|---|---|---|---|
| 16 S | — 215/- | 40 S P. V. | — 260/- |
| 50 S | — 265/- | 75 D N. S. T | — 260/- |
| 2 30 | — 265/- | | |

புதிய இந்தியன் LISTER MODEL 10 H. P என்ஜின்களும் அதற்குரிய உதிரிப்பாகங்களும் விற்பனைக்கு உண்டு.

### ஸ்ரீ ராஜ்ரெக்ஸ் இண்டஸ்றீஸ்

வட்டு-கிழக்கு, சித்தன்கேணி.

(46600)



## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 31 — 08 — 1935

இறைவன் நிழலில்: 03 — 05 — 1996

அமரர்

### குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை

(அச்சுவேலி)

பிள்ளை, பிள்ளை என்றழைக்கும் பாசமிகு அப்பாவே! ஆண்டொன்று சென்றாலும் ஆறாதப்பா எம் துயரம். அமலனடி சேர்ந்திடவே, அனுதினமும் வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்மசாந்திக்காக அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் 03-05-1997 காலை 11.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும் அதைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் பங்குபற்றியேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

**மனைவி, பிள்ளைகள்.**

இராமன் வளவு,
அச்சுவேலி.

(46557)


# வெள்ளிவிழா ஏற்பாடு

பருத்தித்துறை, மே 3

யாழ். மாவட்டத்திலுள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் வெள்ளிவிழாவை இம்மாத இறுதிக்குள் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. இச்சங்கங்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சியினை ஆவணப்படுத்தும் வகையில் வெள்ளிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

(ஐ-118)

# அலுமாரிகள் அன்பளிப்பு


வலிகாமம் தெற்கு, மே 3

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினூடாக இப்பகுதியில் உள்ள இரு சிறுவர் பாடசாலைகளுக்கு யூனிசெவ் நிறுவனத்தினால் இரண்டு உருக்கு அலுமாரிகள் வழங்கப்பட்டுள்ளன.

இணுவில் இளந் தொண்டர் சபையினரின் ஆதரவில் நடத்தப்படும் பாலர் பாடசாலைக்கும், சங்குவேலியில் இயங்கும் பாலர் பாடசாலைக்குமே அலுமாரிகள் உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கத்தினால் கையளிக்கப்பட்டன.

(ஐ-152)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 08 — 1910

மறைவு: 14 — 04 — 1996

அமரர்

### சுவாமிநாதர் சுப்பிரமணியம் (ஜே.பி.)

(முன்னாள் பதிவாளர், கோப்பாய்)

**திதி: 03 - 05 - 1997**

வந்ததிலும் போனதிலும்
மனதை வையாதேயென
விந்தையுடன் சொன்னானெடி — கிளியே!
விளங்கு நல்லூர் வாசனெடி.

—சிவ யோக சுவாமிகள்—

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தவர், உற்றார், உறவினர்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(46596)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சிறந்த ஆங்கில, தமிழ் நாவல்களும், பௌதிக கணித புத்தகங்களும், விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு மட்டும். தொடர்பு:- R. பாலசுப்பிரமணியம் B. Sc.(Cey.) 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [46644]

வளர்ப்பு மீன் வகைகள் 'கோல்ட்பிஸ்' மற்றும் பல வகை மீன்வகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஐ. குட்டி, 588/8, நாவலர் வீதி, அரியாலை. (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை.) (46599)

வரலாறு ஆண்டு — 9 அலகுரீதியான முழுப்பாடத் திட்ட வினா விடை, ரூபா 30/- ஆக்கம்: கே. எஸ். முத்துலிங்கம், எல்லா புத்தக சாலைகளிலும் கிடைக்கும். [46529]

**காணி விற்பனைக்கு**

மானிப்பாய் சந்தை ஒழுங்கைக்குள் 6 பரப்புக் காணி கிணற்றுடன் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- த. செல்லையா, சந்தைஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். [47204]

**இறைச்சிக்கோழி**

புறோயிலர் (Broiler) இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. முகவரி;- இல. 101, (இலுப்பையடிச் சந்தி அருகாமை) பலாலி றோட், யாழ்ப்பாணம். [46636]

**திருமணசேவை**

சேவை நோக்குடைய, நம்பகமான, நிறுவனமயப்படுத்தப்பட்ட சேவையொன்றில் அனைத்து மணமக்களது குறிப்புக்களையும், தகவல்களையும் ஒழுங்கிணைப்பதே பொருத்தமான தாமதமற்ற திருமணங்களுக்குரிய வழியாகும். முன்னின்று செயற்பட உதவியோருக்கும் ஆதரவளிக்கின்ற சேவை. பலதரங்களிலும் மணமக்கள் தேர்வுக்கு: 51, வைமன் வீதி, நல்லூர். [46631]

**சோதிடம்**

எத்தகைய தீராத பிரச்சினைகளும்தீர, விவாகத்தடை, கல்வித்தடை, தொழில் தடை நீங்க ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். குருக்கள், பொய்யாமொழி சோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, நல்லூர். [46553]

## செத்தல் மிளகாய் விலை குறைகிறது

யாழ். குடாநாட்டில் செத்தல் மிளகாயின் விலை குறைந்து வருகிறது.

கிலோ 120 ரூபாவாக விற்கப்பட்டு வந்த செத்தல் மிளகாய் தற்போது கிலோ 85 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (ஐ–173)

## வீடு தேவை

வசதியான வீடு அருள் ஆச்சிரமம், ஆயர்இல்லம், பெரிய கோயில், பிரஸ்றோட் அண்மித்த பகுதிகளில் விற்பனைக்கு இருப்பின் விலை விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

**இல: 612**
**C/O 'உதயன்'**
**யாழ்ப்பாணம்.**

(46646)

---

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம்

**கனடா கிளையின்**

**அனுசரணையுடன் நடத்தும்**

விசேட வகுப்புக்களுக்கு

# ஆசிரியர் தேவை

**ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சித்திரம்**

ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு கல்வித் தகைமையும், அனுபவமும், பயிற்சியும் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கற்பிக்கப்பட வேண்டிய வகுப்புகள்:
ஆண்டு **09, 10, 11**

சம்பளம்: ரூபா **4000/-** இல் இருந்து

விண்ணப்ப முடிவுத் திகதி: **1997 - 05 - 15**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர்,
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம், நெடுந்தீவு.

★ வெளியூர் ஆசிரியர்களுக்கு இருப்பிட வசதி செய்து தரப்படும்.

**தலைவர்,**
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம், நெடுந்தீவு.

(46639)

---

# 31 ஆம் நாள்
# நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



மண்ணுறவு
09
—
02
—
1942

விண்ணுறவு
04
—
04
—
1997

திருமதி

## இராஜேஸ்வரி சண்முகநாதன்

(பதில் அதிபர், யா/ புற்றளை மகாவித்தியாலயம்)

திருமதி இராஜேஸ்வரி சண்முகநாதன் அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியை 04-05-97 இல் அவரது இல்லத்தில் நடைபெற இருக்கிறது. அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறப்புச் செய்தியை அறிந்து நேரிலும் கடிதமூலமும் ஆறுதல் படுத்திய அனைவருக்கும் இத்தருணத்தில் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

நீண்டியம்பற்றை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(46640)

---

# நீங்காத நினைவில்
# 32 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு:
07
—
09
—
1907

உதிர்வு:
02
—
04
—
1997

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட

## திருமதி சுவானப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"


அன்னாரின் மறைவு கேட்டு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், திருப்பலியில் கலந்து கொண்டு அவருடைய ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்-

No. 7, Rasavinthoddam Road,
Jaffna.

---

# நீங்காதநினைவுகளின்
# நிறைவாண்டு அஞ்சலி



## அமரர் இராசையா தர்மராஜா
(அப்பர்)

மலர்வு:
**26—11—1943**

உதிர்வு:
**14—05—1996**

திதி: **03 - 05 - 1997**

எங்கள் பாசமிக்க சோதரரே!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
நீங்கள் இல்லாத வீடு நிலவில்லா வானம் போல் இருள் சூழ்ந்து விட்டதப்பா? நெஞ்சத்தில் நிலையாக்கி உங்கள் நிழற் படத்தில் விளக்கேற்றி நினைவலைகளில் நீந்தி நிறைவாண்டும் வந்ததுவோ! நிறைவாண்டு தினமாகிய இன்று உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.


என்றும் உங்களை எண்ணி உருகும்:
**அன்புச் சகோதரர்கள்**

இல. 99, சேர். பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(46624)

---

# 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சிவபாதசுந்தரம் பாலச்சந்திரன்
(பாலா)

(கப்பல் வளவு, சுன்னாகம்)

மலர்வு:
**12—11—1953**

உதிர்வு:
**25—04—1995**

திதி: **03 — 05 — 1997**

அன்புக்கு இலக்கணமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து திடீரென எங்களைவிட்டு மறைந்த அன்புத் தெய்வத்துக்கு எங்கள் கண்ணீர்ப் பூக்கள் சமர்ப்பணம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரி.

கோயிலாக்கண்டி,
கைதடி.

(46632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நீங்காப் பிசாசு

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் வடக்கு—கிழக்கில் உள்ள பல தமிழ்ப் பகுதிகள் சிங்களப் பகுதிகளாக மாற்றப்பட்டு விட்டன. அதே போல பல தமிழ்க் கிராமங்களின், இடங்களின் பெயர்கள் சிங்களப் பெயர்களாகவும் மாற்றப்பட்டு விட்டன.

அரசாங்கத்தின் ஆதரவில் அதன் உதவியுடன் நடத்தப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழர்களுக்குப் பேராபத்தை விளைவிக்கும் என்று அவ்வப்போது தமிழ் அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்களும் எதிர்ப்பும் ஆட்சேபமும் தெரிவித்து வந்தனர். ஆனால் அவர்களால் அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பது அனுபவம்.

தமிழர்களுக்கு தொடர்ச்சியான ஒரு நிலப்பரப்பு உண்டு. அதனை அவர்கள் தமது மரபு வழித் தாயகமாக உரிமை கொண்டாடுகிறார்கள். இந்த இரண்டினையும் முறியடிக்கும் அல்லது வெட்டி இல்லாமற் செய்யும் உறுதியான நீண்டகால நோக்குடன் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்ச்சியாக ஒரு வழமை நடைமுறையாகியது.

தமிழ்ப்பகுதிகளில் சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றி, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து, நிரந்தரமாக அந்தப் பகுதிகளில் வாழ்வதற்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஐ. தே. கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றுக்கு மற்றது சளைத்ததல்ல. இரண்டு கட்சிகளும் தாம் ஆட்சிபீடம் ஏறும் ஒவ்வொரு முறையும் ஏட்டிக்குப் போட்டியாக, "நான் அதிகமா, நீ அதிகமா" என்று இவ்விடயத்தில் செயற்பட்டன. இடைவெளி விடாமல் இப்போதும் செயற்படுகின்றன.

இனப் பிரச்சினைக்கு நியாயமான, சுமுகமான நிரந்தரமான தீர்வு ஒன்று காணப்படுவதற்கு உண்மையான விருப்பமின்றி, ஆனால் வெளியே அவ்வாறு போலியாகக் காட்டிக் கொண்டு, காலம் வாங்கப்பட்டது. அந்தக் காலத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் நிலம் படுவேகத்தில் கபளீகரம் செய்யப்பட்டது.

இன்றைய அரசோ இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் பெரும் அக்கறை உள்ளதாகக் கூறிக் கொள்கிறது. அதற்கு ஒரு சிறு அடையாளமாகவேனும் குடியேற்றங்களை, பெயர்மாற்றங்களை அது நிறுத்தவில்லை.

பறையனாலங் குளத்தை 'சப்புமல்புர' என்று பெயர் மாற்றம் செய்ய முனைவதும் திருகோணமலை நகரத்தில் உள்ள மட்டக்கழிப் பகுதியில் குடியேற்றம் நடத்த முனைவதும் பழைய பிசாசு இன்னும் விட்டு நீங்கவில்லை என்பதனையே காட்டுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காண்பதில் அரசுக்கு உண்மையான அக்கறை உண்டா என்ற நம்பிக்கையில்லாத நிலையை இது உருவாக்கியுள்ளது. தமிழ்ப் பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்வதாகக் கூறிக்கொண்டு நடத்தப்படும் குடியேற்றங்களை விட, தமிழர்களை விடுவிப்பதாகக் கூறிக்கொண்டு நடத்தப்படும் நிலப்பறிப்பு மோசமானது; நம்பிக்கைத் துரோகமானது.

# இலங்கைப் பொருளாதாரம்
# கடந்த ஆண்டு பெரும் பாதிப்பு
## மத்திய வங்கி அறிக்கை

கொழும்பு, மே 3

நாட்டில் நீடித்துக் கொண்டிருக்கும் இன நெருக்கடியும் அண்மைக்காலத்தில் நாட்டில் நிலவிய கடும் வரட்சியும் பொருளாதாரத்தை மிகவும் கடுமையாகப் பாதித்துள்ளது. ஆகவே வடக்கு - கிழக்கு யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும்.

1996 ஆம் ஆண்டு பொருளாதார நிலை குறித்து மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வருடம் 5.6 வீதமாகக் காணப்பட்ட வளர்ச்சி வீதம் 96 இல் 3.8 வீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த 7 வருட காலத்தில் இதுவே மிக மோசமான வீழ்ச்சியாகும்.

அரச துறை மற்றும் அரசுக்குச்சொந்தமான வர்த்தக வங்கிகளை தனியார்மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவற்றையிட்டு முழு அளவிலான மீள்பரிசீலனை உடனடியாக அவசியமாகும்.

1995 இல் 8.4 வீதமாக இருந்த வரவு — செலவுத் திட்ட பற்றாக்குறை கடந்த வருடம் ஏறத்தாழ 9 வீதமாக உயர்ச்சி கண்டுள்ளது.

கடந்த காலங்களில் மக்களைத் திருப்திப்படுத்துவதற்கான ஜனரஞ்சக அரசியல் நடவடிக்கைகள் காரணமாகவும், அதிகரித்த யுத்த செலவீனங்கள் காரணமாகவும் வரவு — செலவுத்திட்ட முகாமைத்துவம் பெருமளவில் சிக்கலடைந்துள்ளது.

கடந்த வருடத்தில் பொருள்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன. முன்னைய வருடத்தில் 7.7 வீதமாகவிருந்த நுகர்வோர் சுட்டெண் கடந்த வருடத்தில் 15.96 ஆக உயர்ந்து சாதனை பதித்துள்ளது.

நாட்டின் ஏற்றுமதி வளர்ச்சி கூட 1995 இல் இருந்த 21 சத வீதத்தில் இருந்து கடந்த வருடம் 13 சதவீதமாக மாற்றமடைந்துள்ளது.

இதே வேளை — சுற்றுலாத்துறை, முதலீட்டுத் துறை ஆகியனவும் மிகவும் அமுங்கிப்போயுள்ளன. நீடித்த வரட்சி காரணமாக விவசாயம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ யாழ்ப்பாணம் திரும்பும்

# அகதிகளுடன் ஊடுருவி வந்த சந்தேக நபர்கள் பலர் கைது!
## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, மே 3

யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிவரும் அகதிகளுடன் ஊடுருவி வந்த பல தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்த தெரிவித்தார்.

இவர்கள் தற்சமயம் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

வெளிமாவட்டங்களில் இருந்து சுமார் 68 ஆயிரம் பேர் சமீப காலமாக யாழ்ப்பாணம் வந்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் திஸ்ஸ ஜயதுங்க தெரிவித்தார். (ஐ-150-3)

# இந்திய மீன்பிடிப் படகுகள் மீது தலைமன்னார் அருகே சூடு!

கொழும்பு, மே 3

தலைமன்னார் இராணுவ-கடற்படைக் கூட்டுத்தளத்துக்குச் சமீபமாக 30 இந்திய மீன் பிடிப் படகுகள் மீது கடந்த புதனன்று அதிகாலை 2.30 மணியளவில் கடற்படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத்தீர்த்துள்ளனர்.

படையினரின் வேட்டுக்களையடுத்து அந்தப்படகுகள் பேசாலைப், பக்கம் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் 3.45 மணியளவில் சந்தேகத்துக்குரிய முறையில் கண்ணாடி இழையிலான டிங்கி படகு ஒன்று கூட்டுத்தளம் நோக்கி வருவதைப்படையினர் கண்டதாகவும்-

உடனடியாகக் கரையோரக் காவல் படகு ஒன்று அந்தப் படகுக்கு அருகில் சென்று அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது என்றும்-

அதன் பின் அந்த டிங்கி படகு பேசாலைப்பக்கம் நோக்கிச் சென்றதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-150)

# விமான நிலைய ஊழியர்களிடம் ரூ. 60லட்சம் பெறுமதியான தங்கம்
## சுங்க அதிகாரிகள் மடக்கிப் பிடித்தனர்

கொழும்பு, மே 3

கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரித்து நின்ற ஐக்கிய அரபு எமிரேட்டுக்குச் சொந்தமான விமானத்தை சுத்தம் செய்த எயர்லங்கா ஊழியர்கள் இருவர் அந்த விமானத்தில் இருந்து 60 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ''பிஸ்கட்''டுக்களைக் கையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

அந்த இருவரும் வேலை முடிந்து வாகனம் ஒன்றில் சென்றதாகவும்—

சுங்க அதிகாரிகள் அந்த வாகனத்தை துரத்திச் சென்று அவர்களைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த இரு ஊழியர்களையும் சோதனை செய்த சுங்க அதிகாரிகள் ஒருவரின் சப்பாத்துக்குள் இருந்து 30 தங்க ''பிஸ்கட்''டுக்களையும், மற்றவரிடம் இருந்து 40''பிஸ்கட்''டுக்களையும் கைப்பற்றினர்.

இருவரும் கைது செய்யப்பட்டுதற்சமயம் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (இ-3-150)

# நெடுந்தீவுப் பகுதிக்கும் விரைவில் தொலை பேசி
## ஈ.பி.டி.பி. நடவடிக்கை

நெடுந்தீவு மே 3

நெடுந்தீவுக்கு விரைவில் தொலைபேசித் தொடர்பு வசதி கிடைக்கவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ. பி. டி. பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நெடுந்தீவுக்கு அண்மையில் விஜயம் செய்த போது பொதுமக்களின் வசதி கருதி விரைவில் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தித் தருவதாகக் கூறியிருந்தார்.

அண்மையில் நெடுந்தீவுக்கு வருகைதந்த ஈ. பி. டி. பி. கட்சியின் தீவுப்[illegible] எஸ். மனோ [illegible] இந்த தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ஐ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் பிடுங்க சென்றவர் மிதிவெடியில்

யாழ்ப்பாணம், மே 3

படையினரின் காப்பரண் பகுதிக்குள் தேங்காய் பிடுங்கச்சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு படுகாயமடைந்தார்.

இருபாலை விதானையார் ஒழுங்கைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தையா செல்வரத்தினம் (வயது 58) என்பவரே இடது கால் பாதம் துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# அரியாலை சம்பவம் குறித்து மேலும் தகவல்

கொழும்பு, மே 3

நேற்று முன்தினம் காலை 6.30 மணி அளவில் அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் இறந்தவர்இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி தரத்திலானவர் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இராணுவ அதிகாரியும் சிப்பாய் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும்—

இச்சம்பவத்தில் அதிகாரி கொல்லப்பட சிப்பாய் காயமடைந்தார் என்றும்— மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

# பயணிகள் சேவையை சஜிந்த நிறுத்துகிறது
## இனி பொருள்களை ஏற்றி இறக்கும்

திருகோணமலை, மே 3

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபட்டுவந்த ''சஜிந்த'' என்ற சரக்குக் கப்பல் இம்மாத நடுப்பகுதியில் தனது சேவையை நிறுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அகதிகளை ஏற்றி வருவதற்காக மேலதிகமாக வாடகைக்குப் பெறப்பட்டிருந்த சரக்குக் கப்பலான "சஜிந்த''வின் சேவையை இம்மாத நடுப்பகுதியில் நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் —

இனிமேல் இந்தக் கப்பல் கொழும்பில் இருந்து பொருள்களை வடக்கே எடுத்துவரும் பணியை மேற்கொள்ளும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

# சான்றிதழ் வழங்குதல்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கடந்த இரண்டு மாத காலமாக இடம்பெற்று வந்த தொடர்பாடலுக்கான ஆங்கிலம் எனும் அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 14 இற்கான நிறைவு நாளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கும் —

தொகுதி 15 இற்கான வைபவம் பிற்பகல் 2 மணிக்கும் — புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி இரு வைபவங்களுக்கும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குவார். (இ)

# விளையாட்டு நிகழ்வு

குருநகர், மே 3

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர்போட்டி எதிர்வரும் புதன்கிழமை மாலை 1.30 மணிக்கு வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் வித்தியாலய அதிபர் திருமதி. ப. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-51)

## நாளை

**சித்திரை 21**
**ஞாயிற்றுக்கிழமை**
திதி: துவாதசி
முற்பகல் 8.03 வரை.
நட்சத்திரம் உத்தரட்டாதி
பிற்பகல் 12.44 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 8.56 - 10.26
ராகுகாலம் : 4.26-5.56
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# உடுவில்பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

வலிகாமம், மே 3

உடுவில், கந்தரோடை கிராமங்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இரவு நேரங்களில் மட்டுமல்லாது பகல் நேரங்களிலும் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

பசுமாடுகள், ஆடுகள்போன்றனவும் களவாடப்படுகின்றன.

சில தினங்களுக்கு முன் உடுவிலில் உள்ள ஒரு தொழுவத்தில் இருந்து பத்தாயிரம் ரூபா மதிப்புள்ள பசுமாடு ஒன்று களவாடப்பட்டுள்ளது. (இ-152)

# புலிகள் பேச்சில் பங்குபற்றுவதை புளொட் எதிர்க்கப்போவதில்லை

## மேதினக் கூட்டத்தில் மாணிக்கதாஸன் உரை

யாழ்ப்பாணம், மே. 3

நிரந்தர அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதை நாம் எதிர்க்கவில்லை. கடந்தகால கசப்பு உணர்வுகளை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து பேச்சுக்களில் கலந்து கொள்வதையே எமது கழகம் விரும்புகிறது.

புளொட் இயக்கத்தின் உபதலைவர் என். மாணிக்கதாஸன் இவ்வாறு தெரிவித்தார்.

குருநகர் கலையரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் நடந்த மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உழைக்கும் மக்களின் தினத்தை நாம் இந்த இடத்தில் அனுஷ்டிப்பது மிகவும் பொருத்தமானதே ஆகும். இன விடுதலையை நோக்கமாகக் கொண்ட எமது செயற்பாடுகளில் எமது மக்களது தொழில் ரீதியான தேவைகளுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்து அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த சில காலமாக நாம் இப்பகுதியில் இல்லாமல் இருந்தபோதிலும் எமது மக்களின் பாதுகாப்பான சுபீட்ச வாழ்வுக்கான செயற்பாடுகளை வேறு இடங்களில் இருந்து கொண்டு சளைக்காமல் தொடர்ந்து மேற்கொண்டு வந்தோம்.

1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆனால் அதற்குத் தடையாகவும் இருக்கவில்லை.

அக்காலத்தில் சில அமைப்புகள் இந்திய அமைதிப்படையினருடன் ஒத்துழைத்தன. விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டன. ஆனால் நாம் புலிகளுக்கு எதிராகச் செயற்படவில்லை. புலிகள் மீதான தாக்குதல்களைக் கண்டித்த நாம் அப்போது புலிகளாலும் தாக்கப்பட்டோம்.

அமைதிப்படை இங்கிருந்து வெளியேறியபோது அவர்களுடன் ஏனைய குழுக்களும் வெளியேறின.

ஆனால் நாங்கள் எமது மக்களுக்காக தமிழ்ப் பகுதிகளில் தொடர்ந்து செயற்பட்டோம். காடுகளிலும் வாழ்ந்தோம்.— என்று மாணிக்கதாஸன் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

'புளொட்' இயக்கத்தின் அரசியல் பிரிவின் பிரசாரச் செயலாளர் எஸ். கிருபைராசா தமது உரையில் கூறியதாவது:-

உலகத் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு உரிமை கோரிப் போராடிய இத்தினத்தில் போர் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள தமிழ் கடற்றொழிலாளர்களின் அவல நிலையைப் பறைசாற்ற விரும்புகிறோம்.

இப்பகுதியைச் சேர்ந்த 31 மீனவர்கள் கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். தமிழ் மண்ணின் ஒரு சிறு பகுதியில் மட்டும் இத்தனை அநியாய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறாயின் ஒட்டு மொத்த தமிழ் மண்ணில் எமது மக்கள் சந்தித்த இழப்புக்களை எவராலும் விளங்கிக் கொள்ள முடியும்.

தொடரும் யுத்தத்தினால் இந்தத் தொழிலாளர்களது பிரச்சினைக்கு முடிவு காண முடியாதுள்ளது.

தொழிலாளர்களது பிரச்சினைகள் உட்பட எமது மக்களின் சகலபிரச்சினைகளுக்கும் யுத்தத்துக்கு முடிவு காண்பதன் மூலம் மட்டுமே தீர்வு காண முடியும்.—என்றார்.

'புளொட்' அமைப்பின் வடமராட்சி, தென்மராட்சி அமைப்பாளர் பூ.முத்தமிழ்ச் செல்வன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அவர் அங்கு தலைமையுரையாற்றினார்.

### வெகுஜன அமைப்புகள் ஊர்வலம்

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் கூட்டத்தில் கலந்து கொண்ட 15 வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட பேரணி ஒன்று நடைபெற்றது.

குருநகர் சவக்காலைச் சந்தியில் இருந்து ஆரம்பமான இப் பேரணி கூட்டம் நடைபெற்ற குருநகர் கலையரங்கு வரை நடைபெற்றது.

பேரணியில் கலந்து கொண்டோர் தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தும் பதாகைகளைத் தாங்கிச் சென்றனர்.

பேரணியின் முடிவில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஈ பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் மோகன் உட்படப் பலர் உரையாற்றினர்.

(ஐ-3-51-15)

# கட்சித் தலைவர் பதவியை ஜோன் மேஜர் துறக்கிறார்!

லண்டன், மே 3

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் படுதோல்வி அடைந்த முன்னாள் பிரதமர் ஜோன் மேஜர் கொன்ஸர்வேட்டிவ் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்ய உள்ளார்.

அவரின் அரசில் நிதி அமைச்சராக இருந்த கெனற் கிளாக் கொன்ஸர்வேட்டிவ் கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

# முதல் தடவையாக முஸ்லிம் ஒருவர்

லண்டன், மே 3

பிரிட்டனின் வரலாற்றிலேயே முதன் முதலாக முஸ்லிம் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொழிற்கட்சியைச் சேர்ந்த முகமது சர்வார் என்பவரே அந்த முஸ்லிம் ஆவார்.

பிரிட்டனில் சுமார் 20 லட்சம் முஸ்லிம் மக்கள் மாத்திரமே வாழ்கின்ற போதிலும் முகமது சர்வார் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியில் ஆறாயிரம் முஸ்லிம் மக்கள் மாத்திரமே வாழ்கின்றனர். இருப்பினும் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அந்தத் தொகுதியில் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முகமது சர்வார் ஒரு பாகிஸ்தானியர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-10)

# 120 பெண்கள் தெரிவு

லண்டன், மே 3

பிரிட்டிஷ் தேர்தலில் இம்முறை 120 பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பெண்களுடன் ஒப்பிடுகையில் இது இரண்டு மடங்கு ஆகும்.

(இ-10)

# பி. பி. ஸி. செய்தியாளரும் வெற்றி

லண்டன், மே 3

கடந்த 35 ஆண்டுகளாக பி. பி. சி. யில் யுத்தகள செய்தியாளராகப் பணியாற்றிய மாட்டின் பெல்ட் என்பவர் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

ஆதே சமயம் ஓரின பாலியல் திருமணத்தை வெளிப்படையாக ஆதரிக்கும் பென் பரா சோ என்பவரும் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

(இ-10)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் மத்தியில் உரையாற்றிய ரொனி பிளயர், ''இது ஒரு புதிய தொடக்கம். மக்கள் நம்மீது சுமத்தியுள்ள மேலான நம்பிக்கையை பொறுப்புணர்வோடும் மனம் உவந்தும் ஏற்றுக் கொள்வோம்'' என்றார்.

இந்தத் தேர்தல் முடிவுகள் கடந்த காலம் குறித்து மக்களின் கண்டனங்கள் என்பதைவிட வருங்காலம் பற்றிய எமது மக்களின் எதிர்பார்ப்புக்களின் வெளிப்பாடு என்றே எடுத்துக் கொள்ளுவோம்'' என்றும் அவர் கூறினார். (இ-10)

(மேலும் செய்திகள் 3 ஆம் 8ஆம் பக்கங்களில்)

## திருமலை- காங்கே...

(முதலாம் பக்கத் தொடர்)

அப்போதே இப்போது நடைபெறும் கப்பற் சேவையை நிறுத்துவது குறித்துத் தீவிரமாக ஆராயப்பட்டதாகவும் செயலக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வரும் அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வசதியாகவே திருமலை-காங்கேசன் கப்பற் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதனை நிறுத்துவதற்கு முன்னர் வவுனியாவில் உள்ள அகதிகளை மன்னார் ஊடாக கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்புவது பற்றி ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா - மன்னார் வீதியூடாக அகதிகளை வவுனியாவில் இருந்து மன்னாருக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அனுப்புவது குறித்து ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா — கிளிநொச்சி பாதை திறக்கப்பட்டால் தரை மார்க்கமாகவே அகதிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்ல முடியும் என்றும் அரசாங்க வட்டாரங்கள் கருதுகின்றன.

(அ-150-3)

# பிரேமாவின் சிரார்த்த தின வைபவத்தில் சிறிசேனகூரே

கொழும்பு, மே. 3

கொழும்பு ஹவ்லொக்பகுதியில் இடம் பெற்ற முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் 4 ஆவது சிரார்த்ததின வைபவத்தில் முன்னாள் அமைச்சரும், ஐ. தே. கவின் முக்கிய பிரமுகருமான சிறிசேனகூரே பங்கு பற்றினார்.

பிரேமதாஸவின் குடும்பத்தினருடன் மனத்தாங்கள் அடைந்த நிலையில் வெளிநாடு சென்றிருந்த அவர் கடந்த புதன்கிழமை நாடு திரும்பியிருந்தார்.

நேற்று முன்தினம் நடந்த பிரார்த்தனை நிகழ்வில் சிறிசேன கூரேக்கு ஒரு பக்கத்தில் திருமதி ஹேமா பிரேமதாஸவும், மறுபக்கத்தில் பிரேமதாஸவின் மகள் துலாஞ்சலியும் நின்று பிரார்த்தனைகளில் பங்குபற்றினர்.

(இ-3-150)

# தெரு விளக்கு அமைக்கும் வேலை பருத்தித்துறையில் துரிதம்

பருத்தித்துறை, மே 3

நெல்லியடியிலிருந்து கலிகைச்சந்தி வரை தெரு விளக்கு அமைக்கும் வேலைகள் பூர்த்தி அடைந்து விட்டன.

பருத்தித்துறையிலிருந்து பிரதான வீதி வழியாக நெல்லியடி வரை ஏற்கனவே தெருவிளக்குகள் அமைக்கப் பட்டுவிட்டன.

அடுத்து மந்திகையிலிருந்து கலிகைச்சந்தி வரை தெரு விளக்கு அமைக்க இலங்கை மின்சாரசபை முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

இராணுவத்தினர் இரவு வேளையில் ரோந்து செல்வதற்கு வசதியாக மின் விளக்குகளைப் பிரதான வீதிகள் தோறும் அமைத்து வருகின்றனர். விரைவில் பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி ஆகிய பகுதிகளுக்குத் தனித்தனியான ஜெனரேட்டர்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்மூலம் வீதியோரங்களில் உள்ள வீடுகளுக்கு இரண்டு மின்விளக்குகள் பாவிப்பதற்கு ஏற்ற வகையில் மின் விநியோகம் செய்யப்பட இருப்பதாக மின்சார சபை உயரதிகாரி தெரிவித்தார். (இ-118)

# தாதியருக்கு அடுத்த மாதம் முதல் சம்பள அதிகரிப்புக் கிடைக்கும்

## வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, மே 3

தாதிமார் சம்பளத்திலுள்ள குறைபாடுகளுக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாக பேராசிரியர் நந்ததாஸ கோதாகொட குழு சமர்ப்பித்துள்ள சிபார்சுகள் அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுல் செய்யப்பட உள்ளன.

இந்த வருடம் 60 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும். மிகுதியாகவுள்ள 40 சதவீத சம்பள உயர்வு அடுத்த வருடம் வழங்கப்படும்.

சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி இது சம்பந்தமாக அமைச்சரவை அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க இருக்கின்றார்.

தாதிமார் சங்கத்தின் தலைவர் மற்றும் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர் அமைச்சர் பௌஸி இந்த விவரங்களை வெளியிட்டார்.

இதனை அடுத்து தாதிமார் சங்கம் இம்மாதம் 5 ஆம் திகதியும் 6 ஆம் திகதியும் நடத்துவதற்கு உத்தேசித்திருந்த வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுள்ளது.

(இ-4)

# பருத்தித்துறை பஸ் நிலைய பகுதியில் பயன்தரு மரங்கள்

வடமராட்சி, மே 3

பருத்தித்துறை பஸ் நிலையம், பழைய சந்தைச் சதுக்கம் ஆகிய பகுதிகளில் நிழல் தரும் மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன.

இப்பகுதிகள் வெளியாக இருப்பதனால் அத்தியாவசிய தேவைகளுக்காக வருவ பொதுமக்கள் அகோர வெயிலால் ஒதுக்கிடமின்றித் தவிக்க நேரிட்டு வந்தது.

தென்னை, மா, நெல்லி, கொய்யா ஆகிய பயன் தரும் மரங்களே இப்பகுதிகளில் நாட்டப்பட்டன.

நாட்டப்பட்ட மரக்கன்றுகளைச் சுற்றி வலைகளினால் கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன. பவுஸர் மூலம் இம் மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் மரக்கன்றுகளை வாங்கிப் படையினரிடம் வழங்கியிருந்தது.

— படையினரின் அனுசரணையுடன் இவை இங்கு நடப்பட்டுள்ளன.

## சிறிசேன கூரே...

(முதலாம் பக்கத் தொடர்)

கலந்து கொள்ளவே அவர் இலங்கை திரும்பியதாக தெரிவிக்கப்பட்டபோதும் —

முன்னர் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையின் படி அவர் கைது செய்யப்படலாம் என்று கொழும்பில் பேசப்பட்டது.

லலித் அத்துலத் முதலி கொலை தொடர்பாக விசாரணை செய்த ஆணைக் குழுவின் விசாரணை முடிவடைந்து அதன் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதால், பிடியாணை உத்தரவு இனிச் செல்லுபடியாகாது என்று ஆணைக்குழுவின் செயலாளர் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை — ஆணைக் குழுவை தான் அவமதிக்கவில்லை என்றும் —

சட்டத்தரணி ஒருவர் மூலம் சாட்சியம் அளிக்கதான் நடவடிக்கை எடுத்ததாகவும் — சிறிசேன கூரே தெரிவித்துள்ளார். (இ-3-21-150)

# பாம்பின் விஷத்தில் மருந்து

பாம்பின் விஷத்தையும் மனித இரத்தத்தையும் சேர்த்து ஒட்டும் தன்மை வாய்ந்த பசை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அறுவைச் சிகிச்சையின் போது ஏற்படும் காயங்களைத் தைத்துப் பொருத்துவதற்குப் பதிலாக இந்தப் பசையினால் ஒட்டிக் குணப்படுத்தும் முறையினை பிறேசில் நாட்டுமருத்துவ ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாகக் கண்டுபிடித்துள்ளனர்.

(ஐ-10)

## தொழிற்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனில் உள்ள ஈழத் தமிழர்கள் பலர் தொழிற்கட்சியின் வெற்றிக்காக பகிரங்கமாக பிரசார நடவடிக்கைகளில் இறங்கி இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

(இ-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகமனையில் 03-05-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org